காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றியம் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினருமான க. சுந்தர் முன்னிலையில் உத்திரமேரூர் ஒன்றிய கழக செயலாளரும் ஒன்றிய குழு உறுப்பினருமான கெ.ஞானசேகரன் மற்றும் ஒன்றிய கழக துணை செயலாளரும் ஒன்றிய குழு உறுப்பினருமான எஸ்.தயாளன் (எ) ருத்திரகோட்டி ஏற்பாட்டில் இளநகர் கிராமத்தைச் சேர்ந்த அ.தி.மு.க. கிளைக் கழக செயலாளர் மற்றும் ஊராட்சி மன்ற துணை தலைவருமான எஸ்..மோகன்தாஸ் தலைமையில் அ.தி.மு.க.வினர் ஏ.ஞானபிரகாசம், எஸ்.பச்சையப்பன், டி. பழனி, எஸ். தயாளன், வி. சதீஷ், வி. தட்சிணாமூர்த்தி, பி. ஸ்ரீதர் உள்ளிட்ட ஏராளமானோர் தி.மு.கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். இணைந்த அ.தி.மு.க.வினருக்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. சால்வை அணிவித்து வரவேற்றார்.

பொதுமக்களின் வீடுகளை புல்டோசர் மூலம் இடிக்கும்

மாநில பா.ஜ.க., அரசுகளுக்கு உச்சநீதிமன்றம் கண்டனம்!

புதுடெல்லி, நவ. 14 -

உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான் உள்ளிட்ட பா.ஜ.க., ஆளும் மாநிலங்களில், அரசுக்கு எதிராக குரல் கொடுப்பவர்களின் வீடுகள் புல்டோசர்கள் மூலம் இடிக்கப்படுவதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் உச்சநீதிமன்றம் நேற்று தீர்ப்பு வழங்கியது.

நீதிபதிகள் பி.ஆர்.கவாய், கே.வி.விஸ்வ நாதன் அமர்வு வழங்கிய தீர்ப்பில், பொதுமக்களின் வீடுகளை புல்டோசர் மூலம் மாநில பா.ஜ.க., அரசுகள் இடித்து அகற்றுவது சட்டவிரோதம் என்று தீர்ப்பு வழங்கியது. வீடுகளை இடிப்பது அரசியல் சாசனத்திற்கு எதிரானது என்றும், வீடு என்பது ஒவ்வொருவரின் கனவு மற்றும் புகலிடம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களின் உடைமைகளை சட்டத்துக்கு புறம்பாக இடிக்கக் கூடாது என்றும், குற்றவாளிகளின் ஆக்கிரமிப்பு வீடுகளாக இருந்தாலும், சட்டத்தை பின்பற்றிதான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றம்சாட்டப்பட்ட ஒருவரின் வீட்டை இடிப்பது அடிப்படை உரிமைக்கு எதிரானது என்றும் உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. ஜனநாயக நாட்டில் சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்ய வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. ஆக்கிரமிப்பு கட்டடங்களை அகற்ற வழிகாட்டு நெறிமுறைகளையும் உச்சநீதிமன்றம் வெளியிட்டுள்ளது.

அதில், ஆக்கிரமிப்பு வீடுகளை அகற்ற, தபால் மூலம் நோட்டீஸ் அனுப்பி, 15 நாட்கள் அவகாசம் வழங்கி, அதன் பின்னரே அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். முடிந்தவரை கட்டடங்களை அகற்றுவதை தவிர்த்து, மாற்று நடவடிக்கைகளை எடுக்க முயற்சிக்க வேண்டும். அதிகாரத்தை கையில் எடுத்து கொண்டு, விதிகளை மீறி புல்டோசர்கள் மூலம் வீடுகளை இடித்தால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு பாயும் என்றும் உச்சநீதிமன்றம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்நிலையில், உச்சநீதிமன்றத்தின் இந்த தீர்ப்பு பா.ஜ.க., ஆளும் மாநில அரசுகளுக்கு வைக்கப்பட்ட குட்டாக பார்க்கப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி

பேருந்து சாலைகள் துறை பே. சா. து. ந. க. எண் : பி4 / 4396 / 2024

குறுகிய கால மின்னணு இரண்டு உறை ஒப்பந்த புள்ளி அறிவிப்பு

கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து அவர்களால் கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பேருந்து சாலைகள் துறை மண்டலம் 13 ஆகிய 5 இடங்களில் பஸ் பே மற்றும் பஸ் டெர்மினஸ் புதுப்பிக்கும் பணி.

பணியின் உத்தேச தொகை அதிகபட்சம் ரூ. 408 லட்சம்

முன்வைப்பு தொகை: மொத்த பணியின் உத்தேச தொகையில் 1%

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் 05.12.2024 அன்று மாலை 3.00 மணி வரை

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம்: 06.12.2024 அன்று மாலை 3.30 மணி

மேலும் விவரங்களுக்கு www.tntenders.gov.in இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 4928 / ஒப்பந்தப்புள்ளி / 2024 கண்காணிப்பு பொறியாளர்/ பே.சா.து

தமிழ் இலக்கியம் மற்றும் பண்பாட்டு ஆய்வாளர்

பேராசிரியர் ராஜ் கௌதமன் மறைவு! தமிழ்ச் சமூகத்துக்கான பேரிழப்பாகும்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ. 14 -

தமிழ் இலக்கியம் மற்றும் பண்பாட்டு ஆய்வாளராக விளங்கிய பேராசிரியர் ராஜ் கௌதமன் அவர்கள் மறைவிற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

தமிழ் இலக்கியம் மற்றும் பண்பாட்டு ஆய்வாளராக விளங்கிய பேராசிரியர் ராஜ் கௌதமன் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகுந்த துயருற்றேன். அவரது மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒடுக்கப்பட்டோர் பார்வையில் சமூக வரலாற்று ஆய்வுகள் படைப்பு தன்வரலாறு விமர்சனம் மொழிபெயர்ப்பு ஆகிய துறைகளில் விரிவான பங்களிப்புகளை வழங்கிய தமிழின் முன்னணி முற்போக்குச் சிந்தனைமுகமான ராஜ் கௌதமன் அவர்களது மறைவு என்பது தமிழ்ச் சமூகத்துக்கான பேரிழப்பாகும். அவரை இழந்து வாடும் அவரது இணையர் பேராசிரியர் க.பரிமளம், அவரது தங்கை எழுத்தாளர் பாமா உள்ளிட்ட குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் தமிழ் அறிவுப்புலத்தைச் சேர்ந்த தோழர்கள் என அனைவருக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

ஜம்மு காஷ்மீரில் நிலநடுக்கம்!

ஜம்மு-காஷ்மீர், நவ.14-

ஜம்மு காஷ்மீரில் 5.2 ரிக்டர் அளவில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இன்று காலை 10.43 மணியளவில் காஷ்மீர் பள்ளத்தாக்கில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாகத் தேசிய நில அதிர்வு கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது.

பூமியில் சுமார் 192 கிலோமீட்டர் ஆழத்தில் இந்த நிலநடுக்கமானது ஏற்பட்டுள்ளதாக அதன் அறிக்கை தெரிவிக்கின்றது. இதனால் அதிர்ச்சியடைந்த மக்கள் சாலைகளில் தஞ்சமடைந்தனர்.

இந்த நிலநடுக்கத்தால் உயிரிழப்பு சம்பவங்கள் எதுவும் ஏற்படவில்லை. மேலும், பொருட்சேதமும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆர்.கே.பேட்டை ஒன்றியம் அம்மையார்குப்பம் பகுதியில் பள்ளி கட்டிடம் வேண்டுமென்று கோரிக்கை வைத்த நிலையில் அதற்கான நிதி ஒதுக்கப்பட்டது. இந்நிலையில் 34 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, அடிக்கல் நாட்டில் பணிகளை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கழகச் செயலாளர் சி. என்.சண்முகம் ஊராட்சி மன்ற தலைவர் ஆனந்தி செங்குட்டுவன் உள்பட அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆசிரியர்கள் பள்ளி மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்படி, கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் "என் உயிரினும் மேலான என்ற தலைப்பில் நடத்தப்பட்ட பேச்சு போட்டியில் பட்டைத் தீட்டப்பட்ட இளம் பேச்சாளர்கள் பங்கேற்ற கருத்தியல் தொடர் பேச்சரங்கம், நவம்பர் 2 முதல் நவம்பர் 13 வரை நடைபெற்ற தொடர் எட்டு பேச்சரங்கத்தில் பங்கேற்ற 16 இளம் பேச்சாளர்களுக்கு இன்று நடைபெற்ற எட்டாவது தொடர் பேச்சரங்க இறுதியில் அவர்களுக்கு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி .கே. சேகர் பாபு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவருடைய நூற்றாண்டு நாணயத்தையும் பொன்னாடை போர்த்தி மரியாதை செலுத்தி கௌரவிதார். உடன் சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன் அவர்களும், நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர்கள் தமிழன் பிரசன்னா, பி.எம்.யாழ்னி, இரா.நரேந்திரன் மற்றும் துறைமுகம் மேற்கு கிழக்கு பகுதி செயலாளர்கள் எஸ் முரளி ,எஸ் ராஜசேகர் உடனிருந்தனர்.

எவ்வளவு பெரிய மழையையும் சமாளிக்கும் வகையில்

சென்னை மாநகராட்சி நிர்வாகம் தயார் நிலையில் உள்ளது!

தூர்வாரும் பணிகளைப் பார்வையிட்ட அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!

சென்னை, நவ.14-

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, நீர்வளத் துறையிடமிருந்து பராமரிப்புப் பணிகளுக்காக பெருநகர சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்ட திரு.வி.க.நகர் மண்டலத்திற்குட்பட்ட ஓட்டேரி நல்லா கால்வாயில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் வண்டல்கள் தூர்வாரும் பணியினை நேற்று (13.11.2024) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, அம்பேத்கர் பாலம் அருகில் ஓட்டேரி நல்லா கால்வாய் மற்றும் அண்ணாநகர் மண்டலத்திற்குட்பட்ட விருகம்பாக்கம் கால்வாய் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டு வரும் வண்டல்கள் தூர்வாரும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ச்சியாக, கோடம்பாக்கம் மண்டலம், தியாகராய நகர், தெற்கு உஸ்மான் சாலையில் உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியில் ரூ.164.92 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் மேம்பாலப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணியினை விரைந்து முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்ததாவது :-

எவ்வளவு பெரிய மழை பெய்தாலும், அதனை சமாளிக்கும் வகையில் அனைத்து நிலையிலும் பெருநகர சென்னை மாநகராட்சி தயார்நிலையில் உள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் கடந்த 01.10.2024 முதல் 12.11.2024 வரை 437.35 மி.மீ. மழை அளவு பதிவாகியுள்ளது. இன்று (13.11.2024) காலை 8 மணி வரை கடந்த 24 மணி நேரத்தில் சராசரியாக 26.89 மி.மீ. மழை அளவு பதிவாகியுள்ளது. அதிகபட்சமாக திருவொற்றியூர் மண்டலத்திற்குட்பட்ட கத்திவாக்கம் பகுதியில் 47.40 மி.மீ. மழை அளவும், குறைந்தபட்சமாக அடையாறு மண்டலத்திற்குட்பட்ட வேளச்சேரி பகுதியில் 9.60 மி.மீ. மழை அளவும் பதிவாகியுள்ளது.

மாநகராட்சிப் பகுதிகளில் இது வரை எந்த இடத்திலும் மழைநீர் தேக்கம் ஏதுவுமில்லை. சிறிதளவு தேங்கிய மழைநீரும் உடனடியாக அகற்றப்பட்டுள்ளது. மழையின் காரணமாக ஒரு மரம் விழுந்துள்ளது. அந்த மரமும் உடனடியாக அகற்றப்பட்டுள்ளது.

சுரங்கப் பாதைகள்!

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 329 இடங்களில் நிவாரண மையங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்த மையங்களில் உணவு, சுகாதார வசதி, குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளன. பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நிவாரண மையங்களுக்கு உணவு வழங்க 120 மைய சமையல் கூடங்கள் தயார் நிலையில் உள்ளன. தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்களை மீட்டு நிவாரண மையங்களில் தங்க வைப்பதற்காக 103 படகுகள் தயார்நிலையில் உள்ளது. இதில் 36 படகுகள் மாநகராட்சிக்கு சொந்தமாக வாங்கி தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

சென்னையில் உள்ள 22 சுரங்கப்பாதைகளில், கணேசபுரம் சுரங்கப்பாதையில் இரயில்வே மேம்பாலப் பணி காரணமாக தற்காலிகமாக போக்குவரத்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 21 சுரங்கப்பாதைகளிலும் போக்குவரத்து சீராக உள்ளது. மழைநீர் தேங்கும் இடங்களில் மழைநீரை வெளியேற்றும் வகையில் பல்வேறு திறன் கொண்ட 1,324 மோட்டார் பம்புகள் தயார் நிலையில் உள்ளன. இதில் 8 மோட்டார் பம்புகள் தற்போது செயல்பட்டு வருகிறது. கடந்த 15.10.2024 அன்று மழைக்காக 100 குதிரைத் திறன் கொண்ட 88 மோட்டார் பம்புகள் பயன்படுத்தப்பட்டது. தற்போது 100 குதிரைத் திறன் கொண்ட 134 மோட்டார் பம்புகள் தயார் நிலையில் உள்ளது. கடந்த மழைக்கு மோட்டார் பொருத்தப்பட்ட 243 டிராக்டர்கள் பயன்படுத்தப்பட்டது. தற்போது மோட்டார்கள் பொருத்தப்பட்ட 466 டிராக்டர்கள் தயார் நிலையில் உள்ளன.

மழைக்காலத்தினை முன்னிட்டு, 15.10.2024 முதல் 11.11.2024 வரை சென்னையில் மட்டும் இதுவரை 2,193 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டது. இதன் மூலம் 1,19,888 நபர்கள் பயனடைந்துள்ளனர். வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு பெருநகர சென்னை மாநகராட்சியில் அலுவலர்கள், பொறியாளர்கள், பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட 22 ஆயிரம் பேர் மழை வெள்ள மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட தயார்நிலையில் உள்ளனர். கடந்த மழையின் போது 12,300 தன்னார்வலர்கள் பதிவு செய்த நிலையில் தற்போது வரை 18,500 தன்னார்வலர்கள் பதிவு செய்துள்ளனர்.

சூப்பர் சக்கர இயந்திரங்கள்!

சென்னைக் குடிநீர் வாரியத்தின் சார்பில் கழிவுநீர் அகற்றும் பணிக்காக சென்னைக் குடிநீர் வாரியத்தின் 73 எண்ணிக்கையிலான சூப்பர் சக்கர் இயந்திரங்கள், மற்ற மாநகராட்சி/நகராட்சி/மாவட்டத்திலிருந்து கொண்டு வரப்பட்ட 85 சூப்பர் சக்கர் இயந்திரங்கள், பாதாள சாக்கடைகளில் உள்ள அடைப்புகளை சரிசெய்வதற்கு 524 ஜெட்ராடிங் மற்றும் டீசில்டிங் இயந்திரங்கள் தயார்நிலையில் உள்ளன.

நீர்வளத்துறையிடமிருந்து பராமரிப்புப் பணிகளுக்காக மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்ட ஓட்டேரி நல்லா கால்வாய், விருகம்பாக்கம் கால்வாய் மற்றும் வீராங்கல் ஓடை கால்வாய் ஆகிய 3 கால்வாய்களிலும் வண்டல்கள் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது ஓட்டேரி நல்லா கால்வாயில் 1000 டன் வண்டல்கள் அகற்றப்பட்டுள்ளது.

10 கி.மீ. நீளத்திற்கு வண்டல்கள் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கால்வாய்கள் கடலில் சேரும் இடத்தில் உள்ள நெடுஞ்சாலைத்துறையின் பாலத்தினை உயர்த்தி கட்ட வேண்டும்.

அங்கு செல்லும் மின் ஒயர்களை சரிசெய்ய வேண்டும். இவை சரிசெய்யப்பட்டால் இந்தப் பகுதிகளில் நீர்த்தேக்கம் ஏற்படாது. இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விரைவில் முடிக்கப்படும்.

சாலை வெட்டுப் பணிகள்!

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள், அமைச்சர் பெருமக்கள் மற்றும் அலுவலர்கள் மழை காரணமாக மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக இந்தப் பணிகளில் மிகவும் கண்ணும் கருத்துமாக செயல்பட்டு வருகின்றனர்.

மழையின் காரணமாக பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் சாலை வெட்டுப் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மழை நின்றவுடன் உடனடியாக நிதி ஒதுக்கப்பட்டு சாலைகள் சீர் மைக்கப்படும்.

கிண்டி ரேஸ்கோர்ஸ் பகுதியில் வெட்டப்பட்டுள்ள குளங்களில் மழைநீர் சேகரிக்கப்பட்டு அந்தப் பகுதிகளில் மழைநீர்த்தேக்கம் ஏற்படுவது தடுக்கப்படும். மேலும், வேளச்சேரி ஏரிகளில் வரத்துக்கள் சரிசெய்யப்பட்டுள்ளது. வேளச்சேரி ஏரிக்கும் செல்லும் நீர் மற்றும் தென்சென்னையில் செல்லும் நீர் ஆகியவை இந்தக் குளங்களில் சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மழைக்காலங்களில் கொசு மருந்து தெளித்தல், கொசுப் புகை மருந்து அடித்தல் போன்ற சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி (திரு.வி.க.நகர்), எம்.கே.மோகன் (அண்ணாநகர்), ஜெ.கருணாநிதி (தியாகராயநகர்), துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், செயல் இயக்குநர் செ.சரவணன், தலைமைப் பொறியாளர் (பொது) எஸ்.ராஜேந்திரன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

தலைமை: நந்தனம் கி. மதி எம்.சி. - மயிலை த வேலு எம்.எல்.ஏ. பங்கேற்பு!

123வது வட்டக் கழக பி.எல்.ஏ. 2 ஆலோசனைக் கூட்டம்!

வட்டச் செயலாளர் மு.இ. ஏழுமலை அறிக்கை!

சென்னை, நவ.14

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி 123 வது வட்டக் கழக பி.எல்.ஏ. 2 ஆலோசனைக் கூட்டம் நாளை 15.11.2024 அன்று நடைபெறுகிறது.

இது குறித்து வட்ட செயலாளர் மு.இ.ஏழுமலை விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

வரும் 2026 தமிழக சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு, 123 வட்டக் கழக பி.எல்.ஏ. 2 நிர்வாகிகள் அறிமுக ஆலோசனைக் கூட்டம், மயிலை மேற்கு பகுதி கழக செயலாளர் நந்தனம் மதி எம்.சி. தலைமையில், நாளை வெள்ளிக்கிழமை 15.11.2024 மாலை 6 மணி அளவில் ஆழ்வார்பேட்டை சி பி ராமசாமி சாலையில் அமைந்துள்ள, மயிலாப்பூர் சட்டமன்ற அலுவலகத்தில் நடைபெறுகிறது. இதில் மாவட்டக் கழக செயலாளர் மற்றும் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த வேலு எம்.எல்.ஏ. தொகுதி பார்வையாளர் கோவி. லெனின் கழக மாநில தகவல் தொழில் நுட்ப அணி ஆலோசகர் ஆகியோர் எதிர் வரும் 2026 - சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு பி.எல்.ஏ. 2 அறிமுகம் மற்றும் ஆலோசனை வழங்க உள்ளனர்.

நமது வட்டக் கழகத்திற்கு உட்பட்ட பாக பி.எல்.ஏ. 2 நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வட்டக் கழக செயலாளர் மு.இ. ஏழுமலை கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் தெற்கு பகுதியில் வட்டக் கழக செயலாளர்கள் எல்.எல். சுந்தர்ராஜன் எம்.சி. தலைமையில் வான்மதி கதிரவன், முன்னிலையில் 108, 108அ வட்டம் ஒன்றிணைந்து பாக முகவர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது, இதில் எழும்பூர் தொகுதி மேற்பார்வையாளர் மருத்துவர் யாழினி மற்றும் எழும்பூர் தெற்கு பகுதி கழக செயலாளர் வி.சுதாகர் சிறப்புரையாற்றினர். இக்கூட்டத்திற்கு தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம். நாதன், 58 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ராஜேஸ்வரி ஸ்ரீதர், பொதுக்குழு உறுப்பினர் ஆர். நிர்மலா தேவி, பகுதி அவை தலைவர் எஸ்.ரசூல், பகுதி கழக பொருளாளர் எஸ்.ஜெகதீசன், தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் வெற்றிவேலன், அமைப்புசாரா மாவட்ட துணை அமைப்பாளர் அ.தங்க செல்வம், ஒருங்கிணைப்பாளர் ஜெ.அமர்நாத், பகுதி ஒருங்கிணைப்பாளர் முகமது ஷேக் பரீத், பகுதி ஒருங்கிணைப்பாளர் முனிவேல் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.